DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 66 /2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : விக்னேஷ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : கல்யாண சுந்தரம் | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 30.05.2022.

**முதல் விசாரணை:**

நான் வடபூதனம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். 15.07.2021 அன்று வடபூதனம் கிராமம் ஐயர் சாலை ரோட்டில் இரவு 10.30 மணி அளவில் கோகுல்( **எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை ஆஜராகி இருந்தால் நான் அடையாளம் காட்டுவேன்)** என்பவர் எனக்கு போன் செய்து ரூ.1000/- கொடுத்தால் ஒரு பெண்ணுடன் உல்லாசமாக இருப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று கூறி வடபூதனம் கிராமம் ஐயர் சாலைக்கு என்னை வரச்சொன்னார். அப்போது அங்கு நான் சென்றபோது கோகுல் வீரமணி, மற்றும் ஒரு பெண் இருந்தார். அப்போது அங்கு போலிஸ் ஜீப்பை கண்டவுடன் அந்த மூன்று நபர்களும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். பின்பு பாதிக்கப்பட்ட பெண் மற்றும் என்னை காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்று போலிசார் விசாரணை செய்தார்கள். அப்போது என்னுடைய பைக்கை போலிசார் கைப்பற்றினார்கள்.

**( சாட்சி அரசு தரப்பு சார்ந்து சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

15.07.2021ம் தேதி இரவு 11.30 மணிக்கு எனது TN 78 V 6795 பஜாஜ் சிடி

100 பைக்கில் சென்று கோகுல்நாத் இடம் ரூ.1000/- கொடுத்து அதில் ரூ.500/- அங்கிருந்த சங்கீதாவுக்கு கொடுத்து மேற்படி சங்கீதாவுடன் நான் உல்லாசமாக இருந்தபோது உடுமலை அனைத்து மகளிர் போலிசார் எங்களை விசாரித்தபோது சங்கீதாவை கோகுல்நாத் விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதை அவர் விசாரணையில் கூறி எனது பைக்கையும் கோகுல்நாத்தின் பல்சர் பைக் TN 57 AC 1503 பதிவெண் உடையதை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.